DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : கருப்பசாமி | Father/Husband Name : தங்கவேல் |
| Age : 62 | Village : ஆலம்பட்டி |
| Taluk : | Calling : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16 Mar 2026 15:20

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் ஆலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும்.

2. சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்னர் மாலை 05.30 மணிக்கு நான் விவசாயம் பார்த்து விட்டு நான் எனது வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது எனது வீட்டு அருகே வைத்து எனது மகள் தங்கநிலா மீது எதிரி அலெக்ஸ்பாண்டி மண்ணை அள்ளி போட்டார். நான் எதிரி அலெக்ஸ்பாண்டியிடம் ஏன் எனது மகளின் மீது மண்ணை அள்ளிபோட்டாய் என்று கேட்டதற்கு அவர் என்னை கம்பால் எனது இடது கையில் அடித்தார். அந்த இடத்திலேயே எனது கை உடைந்து எலும்பு முறிவு ஏற்பட்டது. என்னிடம் காட்டப்படும் P.R.No.244/2020 ல் உள்ள வேலி கம்பை வைத்து தான் அவர் என்னை அடித்தார். **(அந்த கம்பு அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்பு எதிரி அலெக்ஸ்பாண்டியன் கல்லை எடுத்து எனது மகள் தங்கநிலவின் தலையில் எறிந்தார். தங்கநிலாவுக்கு இடது தலையில் இரத்த காயம் ஏற்பட்டது. அப்போது அங்கு வந்த பாக்கியம் என்னை கல்லால் எறிந்தார். அந்த கல் எனது நெஞ்சில் பட்டு காயம் ஏற்பட்டது. கருப்பசாமி எனது இடுப்பில் கல்லால் எறிந்தார். இதனால் நிலைதடுமாறி நான் கீழே விழுந்தேன். என்னிடம் காட்டப்படும் மூன்று கற்களை வைத்து தான் எதிரிகள் எங்களை தாக்கினார்கள். **(அந்த கல்கள் முறையே அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இந்த சம்பவம் எதனால் நடைபெற்றது என்றால் நான் அலெக்ஸ்பாண்டியிடம் எதற்காக எனது மகள் தங்கநிலவிடம் மண்ணை அள்ளி போட்டாய் என்று கேட்டதற்கு எதிரிகள் மூவரும் என்னை தாக்கினார்கள். இந்த சம்பவத்தை பார்த்த முத்துமாரி, ராஜீவ்காந்தி ஆகியோர் சண்டையை விலக்கி விட்டார்கள். பின்பு எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள்.

4. சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு என்னையும், எனது மகளையும் அவசர ஊர்தி 108 மூலம் சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். காயம்பட்ட எனது மகள் தங்கநிலாவை மதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். சிகிச்சையின் போது எனது மகளுக்கு தலையில் 9 தையல்கள் போடப்பட்டது.

5. இந்த சம்பவத்திற்கு காரணம் எதிரிகளை பால்பாண்டி தூண்டியதாகும். சம்பவம் நடைபெறுவதற்கு முன்பே பால்பாண்டி அந்த இடத்திற்கு வந்து சென்றுவிட்டார். நான் விருதுநகர் அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலீசாரிடம் புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் போலீசாரிடம் கொடுத்தது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct. 16 Mar 2026 15:33

Judicial Magistrate 2, Sattur

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : கௌசல்யா | Father/Husband Name : ஆறுமுகவேல் |
| Age : 31 | Village : காளப்பெருமாள்பட்டி |
| Taluk : | Calling : கார்மென்ட்ஸ் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16 Mar 2026 15:34

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் காளப்பெருமாள்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கார்மென்ட்ஸில் வேலை செய்து வருகிறேன்.

2. இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 எனது அப்பா ஆவார். கடந்த 15.05.2020ம் தேதி மாலை 05.30 மணிக்கு எனது தங்கை தங்கநிலா பள்ளி முடித்து வந்த போது எனது வீட்டின் முன்பாக வைத்து இவ்வழக்கின் எதிரி அலெக்ஸ்பாண்டி எனது தங்கை தங்கநிலா மீது மண்ணை அள்ளி எறிந்தார். அதற்கு எனது அப்பா அ.சா.1 எனது மகளின் மீது ஏன் மண்ணை அள்ளி எறிகிறாய் என்று கேட்டதற்கு எதிரி அலெக்ஸ்பாண்டி எனது அப்பாவை "தேவிடியா மகனே" என்று அசிங்கமாக திட்டி கல்லால் எனது அப்பாவின் இடது கையில் எறிந்தார்.

3. பின்பு அங்கு வந்த கருப்பசாமி எனது அப்பாவை கம்பால் நெஞ்சில் அடித்து காயம் ஏற்படுத்தினார். எதிரி அலெக்ஸ் பாண்டி கல்லை கொண்டு என்னுடைய அப்பாவின் கையில் எறிந்தார். அதில் என்னுடைய அப்பாவின் இடது கை புஜம் ஒடிந்து இறங்கிவிட்டது. எதிரி அலெக்ஸ்பாண்டியன் கல்லால் எனது தங்கை தங்கநிலாவின் தலையில் எரிந்தார். இதனால் எனது தங்கை தங்கநிலாவின் தலை உடைந்து போனது. பால்பாண்டி என்பவர் தூண்டுதலின் பேரில் தான் இந்த சம்பவம் நடைபெற்றது. இந்த சம்பவத்தை நானும், முத்துமாரி, ராஜுவ்காந்தி நேரில் பார்த்து விலக்கிவிட்டோம். அந்த சமயத்தில் எதிரிகள் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி சென்றார்கள்.

4. காயம்பட்ட எனது அப்பாவையும், தங்கையையும் சிகிச்சைக்காக சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் எனது அப்பாவை மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கும், எனது தங்கையை மதுரை அரசு மருத்துவமனைக்கும் அனுப்பி வைத்தார்கள். இந்த சம்பவத்தால் எனது அப்பாவின் இடது கை உடைந்து போனது. எனது தங்கை தங்கநிலாவிற்கு தலை உடைந்து போனது. என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 கம்பு அளவுள்ள கம்பை வைத்து தான் என்னுடைய அப்பாவை அடித்தார்கள். அ.சா.பொ.2 கற்களை விட சற்று பெரிய கற்களை கொண்டு எதிரிகள் எரிந்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct. 16 Mar 2026 15:46

Judicial Magistrate 2, Sattur

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : தங்கநிலா | Father Name : கருப்பசாமி |
| Age : 22 | Village : ஆலம்பட்டி |
| Taluk : | Calling : மாணவி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16 Mar 2026 15:49
(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் ஆலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் B.Ed படித்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும், அ.சா.1 எனது அப்பா ஆவார். எங்கள் வீட்டிற்கு மேற்கு பக்கம் பால்பாண்டி என்பவரின் வீடு இருக்கிறது. அதற்கு பிறகு ஒரு சந்தும், அதற்கு பிறகு எங்கள் வீடும் இருக்கிறது.

2. கடந்த 15.05.2020ம் தேதி மாலை 05.30 மணிக்கு நான் பள்ளி சென்றுவிட்டு வந்து கொண்டிருந்த போது எனது வீட்டின் முன்பாக வைத்து எதிரி அலெக்ஸ்பாண்டியன் என் மீது மண்ணை அள்ளி தூவினார். அதற்கு எனது அப்பா அலெக்ஸ்பாண்டியனிடம் ஏன் இவ்வாறு எனது மகள் மீது மண்ணை அள்ளி வீசுகிறாய் என்று கேட்டதற்கு எதிரி அலெக்ஸ்பாண்டி அவர் கையில் வைத்திருந்த வேலி கம்பால் எனது அப்பாவை இடது கையிலும், நெஞ்சிலும் அடித்தார். எனது அப்பாவின் இடது கை சம்பவ இடத்திலேயே உடைந்து போனது. மீண்டும் அலெக்ஸ்பாண்டியன் எனது அப்பாவின் இடது உள்ளங்கையில் கல்லால் எறிந்தார்.

3. அலெக்ஸ்பாண்டியன் எனது தலையின் இடது பக்கத்தில் எரிந்ததால் எனது தலையில் ரத்த காயம் ஏற்பட்டது. பாக்கியம், கருப்பசாமி ஆகிய இருவரும் எங்களை அடிக்க வந்தார்கள். எதிரிகள் மூன்று பேரும் "தேவிடிய மகளே" என்று அசிங்க பேசினார்கள். இந்த சம்பவத்தை நேரில் பார்த்த முத்துமாரியும், ராஜுவ்காந்தியும் சண்டையை விலக்கிவிட்டார்கள். காயம்பட்ட நானும், எனது அப்பாவும் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தோம். காயம்பட்ட எனது அப்பாவை மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என்னை மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு சிகிச்சையின் போது தலையின் வலது பக்கம் 6 தையல்கள் போடப்பட்டது. எனது அப்பாவிற்கு இடது கை உடைந்து போனது.

4. எனக்கு காயம் ஏற்பட்டதும் நான் மயங்கி விட்டேன், அதனால் என் மீது எறிந்த கல்லை என்னால் அடையாளம் காண்பிக்க முடியாது. என்னுடைய அப்பாவை கம்பை கொண்டு அடிக்கும் போது நான் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 கம்பை விட சற்று தடிமனான கம்பை வைத்து என்னுடைய அப்பாவை அடித்தார்கள். அந்த கம்பின் உயரம் என்னிடம் காட்டப்பட்ட கம்பியின் உயரம் இருக்கும், வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.16 Mar 2026 15:58

Judicial Magistrate 2, Sattur.